
1

# புது வருடத்தில் இறை ஆசீர்






இலவச விநியோகத்திற்காக

புதிய நாள் உதயமானது
எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி
புதிய ஆடை அணிந்து
புதிய புத்தகங்களையும் கொண்டு வந்தோம்
எங்கள் வகுப்பறை மிக அழகாக இருக்கிறது
எங்கள் ஆசிரியர் எங்களை வரவேற்க்கக் காத்திருக்கிறார்
எங்கள் ஆசிரியரை வணங்குவோம்.

வணக்கம் ஆசிரியர்
இறை ஆசீர் உங்களுக்கு

இவை எல்லாவற்றையும் எமக்குத் தந்த
இறைதந்தையே நாங்கள் உமக்கு
நன்றி கூறுகிறோம். இவற்றைப்
பாதுகாத்து வைத்திருப்பதற்கு
எமக்கு உதவி செய்தருளும்.
ஆமென்.



ஒப்படை

- புதிய வருடத்தில் உன்னத இறைதந்தையிடம் இருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுங்கள்.

அறிவுரைப்பு - இப்பாடத்திற்குரிய செயற்பாடுகள் பக்க இலக்கம் 47 இல் உள்ளது.

## 2

# உன்னத இறைதந்தையின் அன்பு




சூரியன் உதிக்க - சந்திரன் ஒளி வீச
நட்சத்திரங்கள் சிரிக்க
ஆகாயத்தில் பறவைக் கூட்டம்
ஆனந்தமாய் இறைவனின்
அன்பைப் பாடிப் பறக்கின்றன.

பழங்கள் நிறைந்த பெரிய மரங்கள்
மரத்தில் சுற்றிய கொடிகள்
துள்ளித் துள்ளித் திரியும்
காட்டில் வாழும் மிருகங்களை
காக்கின்றார் எங்கள்
வல்லமையுள்ள இறைவன்

வயல்களை முத்தமிடும் குளிர்காற்றையும்
பயன் தரும் நல் பூமியையும்
எங்களுக்குத் தந்துள்ளார்
எங்கள் அன்பான இறைதந்தை

மலை உச்சிகளிலிருந்து
வெள்ளியாய்ப் பாயும் அருவிகள்
வளைந்து ஓடும் ஆறுகளில்
துள்ளி நீந்தும் சிறு மீன்கள்
கெளுத்தியும் பெருங்கடலின்
சிங்கி இறாலும்
நீந்தி மகிழும் காட்சிகள்
இறைவனின் மகிமையை உலகிற்கு
தெளிவாய்க் காட்டுவதைப் பாருங்கள்



அன்பின் இறைதந்தையே இந்த அழகிய உலகு உமது அன்பினை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. எமக்கு ஒளியையும் சுத்தமான நீரையும் உணவையும் தந்த உமக்கு நன்றி. ஆகையால் சூழலை அன்போடு காத்து மதிப்பதற்கு சிறுவர் எமக்குக் கற்றுத் தாரும் ஆமென்.



ஒப்படை


- இறைதந்தை படைத்த ஐந்து பொருள்களை ஒரு கூட்டுக்குள் வரைந்து நிறம் தீட்டுங்கள்.


அறிவுரைப்பு - இப்பாடத்திற்குரிய செயற்பாடுகள் பக்க இலக்கம் 53 இல் உள்ளது.

# 3

# ஒற்றுமையும் அன்பும்

அன்போடும் இரக்கத்தோடும்
எம்மை அழைக்கிறார்
எமது பிழைகளை எடுத்துக்காட்டி
எம்மை மன்னித்துத் திருத்துகிறார்.
அறிவுரை கூறி எங்களுக்கு
எண்ணும் எழுத்தும் கற்பிக்கும்
எங்கள் அன்பு ஆசிரியருக்கு
இனிய வாழ்த்துக்கள்.





என்னோடு சேர்ந்து இன்பமுடன்
விளையாடுவர்
விழுந்திடும்போது அணைத்து எனக்கு
ஆறுதல் கூறுவர்
பள்ளி வேலை செய்வதற்கும்
பாசமுடன் உதவுவர்
இன்பமுடன் ஒற்றுமையாய்
நண்பர்கள் எல்லோரும்
என்னோடு இருப்பர்.

துன்பம் ஒன்று வந்தபோது
விரைந்து ஓடி வருவர்
சுகநலம் கேட்டு எப்போதும்
அன்பாய் எமக்கு உதவுவர்
இரக்கமும் பாசமும்
என்றும் எமக்குத் தந்திடும்
அயலவர் அனைவரையும்
காத்து அருள்வீர் இறைவா.



இவர்கள் அனைவரையும் எனக்குத் தந்த உன்னத இறை தந்தைக்கு நன்றி. இவர்களை ஆசீர்வதித்துப் பாதுகாத்தருளும். ஆமென்.



ஒப்படை

- உங்களை அன்பு செய்கின்ற நண்பர்கள் நால்வரின் பெயர்களை எழுதுங்கள்.

செயற்பாடு

- அடுத்து அடுத்து வரும் ஒரே மாதிரியான எழுத்தின் மீது பென்சிலால் ஒரு கோடு கீறுங்கள்.
- எஞ்சி உள்ள எழுத்துகளால் அமைகின்ற சொல்லை பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.
- அதனை உரத்து வாசியுங்கள்.

ப ப ப ள ப ப ப ன ப ப ப து

த த ஆ த த சி த த ரி த த ய த த ர்

க க க அ க க க ன் க க பா க க க ன க க வ க க க ர்

4

# இறைவனின் உன்னத படைப்பு

இறைதந்தையின் உன்னதமான படைப்பு நானே. இறைதந்தை என்னை அன்பு செய்கிறார். இறைதந்தைக்கு நான் பெறுமதி உள்ளவன். இறைதந்தை எனக்குத் தந்துள்ள உடலை நான் சுத்தமாக வைத்துக் கொள்வேன்.



சின்னஞ்சிறிய பிள்ளைகளே
முத்துப் போன்ற பற்களைத் துலக்கி
எண்ணெய் தேய்த்துத் தலைவாரி
தூய்மையான ஆடைகள் அணிந்து
துள்ளி ஓடி நடக்கையிலே
அனைவர் மனதையும் கவர்வீரே

அன்பான இறைதந்தையே என்னை உங்கள் பெறுமதியான பிள்ளையாகப் படைத்தமைக்காக நன்றி. எனது உடலை பாதுகாக்கும் நற்பழக்கங்களைக் கற்பதற்கு எனக்கு உதவியருளும். ஆமென்.



ஒப்படை

- நீங்கள் விரும்புகின்ற இரண்டு நற்பழக்கங்களை பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். அவற்றை வரைந்து நிறந் தீட்டுங்கள்.

## செயற்பாடு

- சிறுவர்களாகிய நீங்கள் இறைதந்தையை மகிழ்விக்கக் கூடிய பழக்கங்களை மட்டும் தெரிவுசெய்து அச்சதுரங் களுக்கு மஞ்சள் நிறம் தீட்டுங்கள்.

| | | |
|---|---|---|
| இரவும் பகலும் பல் துலக்குதல் | நகங்களைக் கடித்தல் | நகங்களை வெட்டுதல் |
| தலைமயிரை சிக்காக வைத்திருத்தல் | சுத்தமான உடை அணிதல் | குளித்தல் |

5

# மரணத்தை வென்ற இயேசு



எம்மைப் பாவத்தில் இருந்து மீட்பதற்காக இயேசு இவ்வுலகிற்கு வந்தார். அவர் இறைதந்தையைப் பற்றி மக்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

அவர் ஏழை, உதவியற்றோருக்கு உதவி செய்தார். நோயாளிகளைக் குணமாக்கினார். எனினும் அன்று இருந்த யூதத் தலைவர்கள் இயேசுவை உண்மையான இறைமகன் என்று ஏற்றுக்கொள்ளவில்லை.




எனது அருமை மகனே, மகளே யூதர்கள் என்னை அதிக வேதனைப் படுத்தினர். பொய்க் குற்றம் சுமத்திப் பாரமான சிலுவையை எனது தோள்மீது வைத்தார்கள். கல்வாரி மலையில் ஏறச் சொன்னார்கள். அப்பயணத்தின்போது பலமுறை சிலுவையோடு விழுந்தேன். சிலுவையில் தொங்கி மரணத்திற்கு உள்ளான வேளையில் உணர்ந்த வேதனையை உங்களுக்காக சகித்துக் கொண்டேன். என்னை வேதனைக்கு உள்ளாக்கிய எல்லோரையும் நான் மன்னித்தேன்.

நான் மரணித்து மூன்று நாட்களுக்குப் பின் மரணத்தை தோல்வி அடையச் செய்து வெற்றியோடு உயிர்த்து எழுந்தேன்.



இறையாட்சியை உங்களுக்குப் பெற்றுத் தருவதற்கே இவை அனைத்தையும் செய்தேன். ஆகவே நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள்.

இப்படிக்கு
உங்கள் அன்புள்ள
இயேசு

அன்பான இயேசுவே, எனக்காக உங்கள் உயிரை பலி கொடுத்தமைக்கு நன்றி. இன்று முதல் நான் உங்களை அதிகம் அன்பு செய்வேன். ஒருவரையும் மனம் நோகச் செய்யாமல் எல்லோருக்கும் இரக்கத்தோடு உதவி செய்ய எனக்கு உதவி செய்தருளும். ஆமென்.



ஒப்படை

- உயிர்த்த இயேசுவின் படத்தை வரைந்து அதன் கீழ் ''என்னோடு தங்கும் இயேசுவே'' எனப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.

அறிவுரைப்பு - இப்பாடத்திற்குரிய செயற்பாடுகள் பக்க இலக்கம் 48 இல் உள்ளது.

# 6

# கீழ்ப்படிந்தோம் நாம் கீழ்ப்படிந்தோம்



தாத்தா :


மகளே, சிறுவன் இயேசு பன்னிரண்டு வயதில் யோசேப்பு, மரியாவுடன் பாஸ்கா விழாவைக் கொண்டாடுவதற்குக் கோவிலுக்குச் சென்றார்.

அவர்கள் திரும்பி வரும்போது இயேசு அவர்களோடு இல்லாததைக் கண்டு மிகவும் துக்கம் அடைந்தனர். மூன்று நாட்களின் பின் கோவிலில் போதகர்கள் நடுவில் இருப்பதைக் கண்டனர். இயேசு நசரேத் ஊருக்குச் சென்று பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தார்.



அம்மா : மகள், இந்த தண்ணீர் கிளாசை தாத்தாவிடம் கொடுங்கள்.

மகள் : நல்லது அம்மா தாத்தாவுக்குத் தண்ணீரைக் கொடுத்து விட்டு இன்னும் இயேசு பற்றிய சில கதைகளைக் கேட்கிறேன்.



ஆசிரியர் : பிள்ளைகளே நான் கொடுத்த படத்தை எல்லோரும் வரைந்து கொண்டு வந்தீர்களா?

ஆனந்தன் : ஆம் ஆசிரியர் படமும் வரைந்தேன். பாடலையும் மனனஞ் செய்தேன்.

ஆசிரியர் : ஆசிரியர்கள் கொடுக்கின்ற வேலையை நன்றாகவும் ஒழுங்காகவும் செய்கின்ற பிள்ளைகளை இறைதந்தை மிகவும் அன்பு செய்கின்றார்.

அன்பான இயேசுவே, நீங்கள் இறைவனின் மகன் எனினும் அகங்காரம் கொள்ளவில்லை, எனது ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் கீழ்ப்படிந்து நல்ல பிள்ளையாக இருப்பதற்கு உதவி செய்தருளும். ஆமென்.



ஒப்படை

- நாம் கீழ்ப்படிய வேண்டிய நால்வரின் பெயர்களை எழுதுங்கள்.

7

# மகிழ்ச்சியோடு நாம் உதவி செய்வோம்



ஆசிரியர் : இம்முறை நாங்கள் தமிழ், சிங்களப் புது வருடத்தை ஒரு சிறுவர் இல்லத்தில் கொண்டாடப் போகிறோம்.

பிள்ளைகள் : சிறுவர் இல்லமா? அது என்ன ஆசிரியர்?

ஆசிரியர் : உங்களைப் போன்ற பிள்ளைகளே அங்கும் இருக்கின்றார்கள். எனினும் அவர்களுக்குப் பெற்றோர்கள் இல்லை. குடும்பமும் இல்லை. அவர்களைப் போன்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

பிள்ளைகள் : எங்களுக்கு நல்ல விருப்பம். நாங்கள் அவர்களுக்குப் பரிசுகளைக் கொடுப்போம்.

ஆசிரியர் : சிறுவர் இல்லங்களிலும் முதியோர் இல்லங்களிலும் பலர் தனிமையில் இருக்கின்றனர். பலர் நோயாளிகளாக இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவி செய்யும்போது இறைதந்தை மகிழ்ச்சி அடைகிறார்.

### இதோ உமது அடிமை

இதோ உமது அடிமை
இறைவா ஏற்பாய் என்னை

எரியா விளக்கு எனை நான் உனக்குத்
தந்தேன் ஏற்றிடுவாய்
உன்னொளி துலங்கத் தன்னையே வழங்கும்
சுடராய் மாற்றிடுவாய்

மலராக் கொத்து வாழ்வினைக் கொய்து
தாள்களில் படைக்கின்றேன்
புனிதம் சிந்தும் பூவாய் என்றும்
வாழ்ந்திட வரம் கேட்பேன்.



### ஒப்படை

- வகுப்பறையில் நீங்கள் நண்பர்களுக்கு உதவி செய்யும் சந்தர்ப்பம் ஒன்றை எழுதி அதனை வரைந்து நிறம் தீட்டுங்கள்.

# 8

# கிறிஸ்துவின் பிள்ளை நல்லபிள்ளை

பிள்ளைகளே! இயேசு உங்களைப் போன்ற சிறுவனாக இருக்கும் போது தன்னை வளர்த்த தந்தைக்குத் தச்சுப் பட்டறையிலே உதவி செய்தார். தாய் மரியாவுக்கும் கீழ்ப்படிந்து வீட்டு வேலைகளில் உதவி செய்தார்.

நாமும் சிறுவன் இயேசுவைப் போல்

பெற்றோர், ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களுக்கு உதவுவோம்.

நண்பர்களோடு வகுப்பறையைச் சுத்தம் செய்வோம்.

ஆதரவு இல்லாதவருக்கு உதவி செய்வோம்.

ஒற்றுமையோடு வேலை செய்வோம்.

இறைவனிடம் செபிப்போம்.



## சின்ன இதயம்

சின்ன இதயம் திறந்துள்ளேன்
என்னோடு பேச வா
உன் மொழி கேட்க வந்தேன்
என்னோடு பேச வா

என்னுள்ளத்தில் கறையுண்டு
குறைகள் பலவுண்டு
உன் மொழியில் நிறைவுண்டு
இதய சுகம் உண்டு
இறைவனே நீரே எந்தன் நம்பிக்கை
என் வாழ்விலே என்றும் நீ துணை

என் உள்ளத்தில் சுமையுண்டு
வழி நீர் சோகமுண்டு
உன் வரவில் சுவையுண்டு
இனிய வாழ்வுண்டு
இறைவனே நீரே எந்தன் நம்பிக்கை
என் வாழ்வில் என்றும் நீ துணை



ஒப்படை

- ஒரு கிறிஸ்தவப் பிள்ளையிடம் இருக்க வேண்டிய நல்ல பண்புகள் மூன்று எழுதுங்கள்.

9

# உன்னத இறைதந்தையை ஆராதிப்போம்





மகள் : அம்மா, நாம் ஆலயத்துக்குச் சென்று இறைதந்தையை ஆராதிப்பது எப்படி என்று படித்தோம்.

அம்மா : நல்லது மகளே எப்படி என்று எனக்கும் சொல்லுங்கள்.



மகள் : ஆலயத்துக்குள் நுழைந் தவுடன் இரண்டு கைகளையும் கூப்பி வணங்கி முழங்கால் படியிட வேண்டும். இரண்டு கைகளையும் உச்சியில் வைத்து தரை யில் விழுந்து வணங்க வேண்டும் எனவும் ஆசிரியர் சொல்லித் தந்தார்.



அன்பான இறைதந்தையே, நீங்கள் என்மீது அதிகம் அன்பாய் இருக்கின்றீர்கள். எனக்கு உயிர், கை, கால், கண், காது, மூக்கு, அறிவு மற்றும் பல ஆற்றல்களைத் தந்துள்ளீர்கள். இவை எல்லாவற்றிற்கும் நான் உங்களை எந்நாளும் வணங்கி ஆராதிக்கின்றேன். ஆமென்.

### புனித நந்நாளிது

புனித நந்நாளிதுவே
புனிதம் கமழ பூமுகம் மலர
புலர்ந்தது இன்ப நாளிதுவே
புனித நந்நாளிதுவே

இறைவனின் அன்பினிலே
இரண்டறக் கலந்திருக்க
நிறையருள் வாழ்வினிலே
நிதமும் மகிழ்ந்திருக்க

வாழ்வது நானல்ல
வாழ்வது இயேசுவே
வார்த்தையின் வழிதனிலே
வாழ்க்கையை நடத்திடவே.



ஒப்படை


- ஆலயத்துக்குச் சென்று செபித்த விதத்தை உங்கள் நற்செயல் புத்தகத்தில் வரைந்து நிறம் தீட்டுங்கள்.

# 10

# தூய மரியா



மரியா எப்பொழுதும் இறை தந்தையிடம் செபித்தார். ஒரு நாள் கபிரியேல் எனும் வானதூதர் அவரிடம் வந்து இயேசுவின் தாயாக மரியாவை தேர்ந்தெடுத்து உள்ளதாகக் கூறினார். மரியா பயந்தார். ஆனால் அவர் மிகவும் தாழ்மையும் கீழ்ப்படிதலும் உள்ளவர் என்பதால் இறை தந்தையின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டார்.



வானதூதர் மரியாவிடம் இன்னும் ஒரு நற்செய்தியைக் கூறினார். அவரது உறவு முறையான எலிசபெத் பிள்ளை இல்லாமல் கவலையில் இருந்தார். எனினும் இறைதந்தை அவளுக்கும் ஒரு பிள்ளையை கொடுத்துள்ளார். இதை அறிந்த மரியா எலிசபெத்துக்கு உதவி செய்ய அவளுடைய வீட்டுக்குச் சென்றார். அவளுடைய ஆசீர்வாதமும் மரியாவுக்குக் கிடைத்தது.



மரியா சிறு பிள்ளைகளிடத்தில் மிகவும் அன்புடையவர். அதனால் பாத்திமா நகரில் லூசியா ஜெசிந்தா, பிரான்சிஸ் ஆகிய மூன்று சிறு பிள்ளைகளுக்குக் காட்சி அளித்தார்.

அன்பான இறைதந்தையே, நீங்கள் எங்களுக்குத் தந்துள்ள மிகப் பெரிய பரிசு மரியா. அவரை எமது தாயாக அன்போடு ஏற்றுக் கொள்ள எம் எல்லோருக்கும் உதவி செய்தருளும். அவரைப் போன்று நாமும் தாழ்மை, நற்பண்பு, கீழ்ப்படிவு, தூய்மை உள்ள பிள்ளைகளாக இருப்பதற்கு எமக்கு வழி காட்டியருளும். ஆமென்.



ஒப்படை

- மரியாவுடைய வாழ்க்கையில் இருந்து நாம் பெற்றுக்கொள்ளகூடிய இரண்டு பண்பு களை எழுதுங்கள்.
- மரியாவுக்காகப் பாடும் ஒரு பாடலை எழுதுங்கள்.

அறிவுரைப்பு - இப்பாடத்திற்குரிய செயற்பாடுகள் பக்க இலக்கம் 49 இல் உள்ளது.

11

# எமது குடும்பம் ஒற்றுமையானது



அம்மா : மகனே, மகளே இப்பொழுது மாலை நேரம் ஆகிவிட்டது. முகங் கைகால்களைக் கழுவிக் கொண்டு வாருங்கள். இப்போது நாம் செபிக்கும் நேரம் வந்துவிட்டது.

மகன் : அப்பா, நாம் ஏன் ஒவ்வொரு நாளும் குடும்பமாகச் செபிக்க வேண்டும்?

அப்பா : மகனே! நாம் தனியாகச் செபிப்பதுபோல குடும்பமாவும் செபிக்க வேண்டியது அவசியமாகும்.

மகள் : அப்பா அது ஏன்?

அப்பா : மகனே, மகளே எங்களுக்கு இறைதந்தை தந்த பரிசு தான் நீங்கள். ஒன்றாகச் செபிக்கும் குடும்பமே ஒற்றுமையான குடும்பம். அவர்கள் மத்தியில் இறைதந்தை இருக்கின்றார். நாங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு அதுவே காரணம்.

அன்பான இறைதந்தையே, எமது குடும்பத்திற்காக நான் மகிழ்ச்சி அடைகின்றேன். எமது குடும்பத்தை ஆசீர்வதித்து எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாத்தருளும் ஆமென்.



## ஒப்படை

- குடும்பத்தில் எல்லோரும் ஒன்று சேர்ந்து செபிக்கும் ஒரு சந்தர்ப்பத்தைச் சித்திரமாக வரையுங்கள்.

## செயற்பாடு

- ஒவ்வொரு நாளும் நீங்கள் இறைதந்தையிடம் நெருங்கிச் செல்வதற்காகச் செய்யக்கூடியதை மட்டும் தெரிவுசெய்து நிறம் தீட்டுங்கள்.






# 12

# இறைவனைச் சந்திக்கச் செல்வோம்

உன்னத இறைதந்தை எழுந்தருளி உள்ள இல்லம் ஆலயம் ஆகும். நாம் வரும்வரை இறைவன் ஆசையோடு காத்துக் கொண்டு இருக்கிறார்.



உங்களில் எவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும் நீங்கள் எவ்வளவு பலவீனர்களாய் இருந்தாலும் இவை ஒன்றையும் இறைதந்தை தேடமாட்டார். நாம் எல்லோரும் ஒன்றாக அமர்கின்றோம். ஒரே குரலாகச் செபிக்கின்றோம். ஆலயத்தில் நாம் எல்லோரும் இறைதந்தையின் பிள்ளைகள் ஆவோம்.

நாம் ஒவ்வொரு நாளும் காலையில் சுத்தமான உடை அணிந்து, வெள்ளைப் பூக்களை எடுத்துக் கொண்டு தூய உள்ளத்தோடு இறைதந்தையை பார்க்கச் செல்லும்போது இறைவன் மகிழ்ச்சி அடைகிறார்.

பாடசாலையிலும் வகுப்பறையிலும் நாம் எல்லோரும் ஒற்றுமையாகச் செபிக்க வேண்டும். நண்பர்களோடு அன்போடு வேலைகளில் ஈடுபட வேண்டும். எப்போதும் இறைதந்தையை மகிழ்விக்கச் செய்யக்கூடியனவற்றை செய்ய முயற்சிப்போம்.

### புகழ்ந்திடு மனமே


புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இயேசுவை
புகழ்ந்திடு காலையிலே

புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இயேசுவை
புகழ்ந்திடு பகலினிலே

புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இயேசுவை
புகழ்ந்திடு மாலையிலே

புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இயேசுவை
புகழ்ந்திடு இரவினிலே

புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இயேசுவை
புகழ்ந்திடு பொழுதெல்லாம்



### ஒப்படை


- உங்கள் பங்கின் பெயரை எழுதுங்கள்.
- ஆலயத்துக்குச் சென்று இறைதந்தையோடு கதைக்கும் விதத்தை வரைந்து நிறம் தீட்டுங்கள்.

அறிவுரைப்பு - இப்பாடத்திற்குரிய செயற்பாடுகள் பக்க இலக்கம் 50 இல் உள்ளது.

13

# எல்லோரினதும் உதவி

இங்கே எமக்கு உதவி செய்கின்றவர்கள் இருக்கின்றனர். இவர்களால் நாங்கள் பெறுகின்ற உதவிகள் என்ன என்று நாம் கதைப்போம்.



இறைதந்தை தினமும் இவர்கள் வழியாக எமக்கு உதவி பெற்றுத் தருகிறார்.

நாம் அந்த உதவிகளைப் பாராட்ட வேண்டும். அவர்களை நினைத்து இறைதந்தையை புகழ வேண்டும். அவர்களிடம் சிரிப்புடனும் இனிமையான வார்த்தைகளாலும் நன்றியைக் காட்ட வேண்டும்.

இறைதந்தை இவர்களைப் போன்று எமக்கும் கை, கால்களைத் தந்துள்ளார்.

இந்த கை, கால்களால் நாம் நாள் முழுவதும் வேலை செய்கின்றோம்.

கைகளால் இறைவனை வணங்குகிறோம். பிறருக்கு உதவி செய்கிறோம்.

இவ்வாறு நல்ல வேலைகளைச் செய்யும்போது மகிழ்ச்சி அடைகிறோம்.

எனினும் சிலர் பிறருக்கு உதவி செய்ய விரும்புவது இல்லை.

தாங்கள் விரும்பியவர்களுக்கு மட்டும் உதவி செய்பவர்களும் இருக்கின்றனர்.

சிலர் பிறரை துன்பப்படுத்துகின்றனர்.

இறைதந்தை இவர்களைப் பற்றிக் கவலை அடைகின்றார்.

சிலர் வேலை செய்ய சோம்பல்படுவர்.

ஆகவே இறைதந்தை எமக்குத் தந்துள்ள கை, கால்களால் நான் நல்ல செயல்களைச் செய்வேன்.

## உன் இதயம் ஒரு பள்ளிக்கூடம்

உன் இதயம் ஒரு பள்ளிக்கூடம் - அதில்
என் இதயம் ஒரு மாணாக்கன் இயேசுவே

தாழ்ச்சி என்பதே முதல் பாடம்
அதில் வளர்ச்சி காண்பதே மனப்பாடம்
சாந்தம் கொள்வதே வீட்டுப் பாடம்
அதில் சாந்தி காண்பதே வெற்றியாகும்

அன்பு என்பதே எழுத்தாகும்
பிறர் அன்பு செய்வதே சொல்லாகும்
பகைமை மறப்பதே பொருளாகும்
இறை பாசம் வளர்ப்பதே நயமாகும்

வாய்மை என்பதே எண்ணாகும்
உடல் மெய்மை இருப்பதே கணக்காகும்
நேர்மை வளர்ப்பதே வழியாகும்
மனத்தூய்மை நிலைப்பதே விடையாகும்.



### ஒப்படை


- இப்பாடத்தில் எமக்கு உதவி செய்த நால்வரின் பெயர்களை எழுதுங்கள்.
- எமக்கு உதவி செய்பவர்களைத் தந்த இறை தந்தைக்கு நன்றி கூறிச் சிறிய செபம் ஒன்று எழுதுங்கள்.

# 14

# அறிவுரை கூறுவார் - நல்வழி காட்டுவார்.



இன்று எமது ஆலயத்தில் சிறுவர்களின் திருப்பலி நடைபெற்றது. சிறுவர் எமக்கு நல்லன பலவற்றை அருட்தந்தை சொல்லித் தந்தார். இவற்றைக் கேட்டதும் எனது பிழைகளைத் திருத்துவதற்கு உறுதி கொண்டேன். அருட்தந்தையர் எம்மை அதிகம் அன்பு செய்வர்.



மறைக்கல்வி வகுப்பில் எமக்குப் படிப்பிக்கின்ற அருட்சகோதரர் ''சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்'' எனக் கூறிய இயேசுவின் வார்த்தைகளை எல்லோரும் விரும்பும் விதத்தில் விளக்கினார். அவர் கூறியவற்றை நான் ஒரு நாளும் மறக்கவே மாட்டேன்.



பாடசாலையில் எங்களுக்கு மறைக்கல்வி பாடம் படிப்பிக்கின்ற அருட்சகோதரியும் மிக நல்லவர். சிறு சிறு கதைகள் சொல்லித் தருவார். நாங்கள் நல்வழியில் செல்ல அறிவுரை கூறுவார்.

எங்கள் ஆசிரியையும் எங்களுக்குக் கதைகள் சொல்லித் தருவார். கேள்விகள் கேட்கும்போது நான் மகிழ்ச்சியோடு பதில் கூறுவேன்.

*அன்பான இயேவே, நாங்கள் நல்வழியில் செல்வதற்கு உதவி செய்யும் எல்லோரையும் ஆசீர்வதியும். அவர்களுக்கு நல்ல சுகத்தைக் கொடுத்தருளும். ஆமென்.*



ஒப்படை

- உங்களை நல்வழியில் செல்வதற்கு உதவி செய்யும் இருவரின் படத்தை வரைந்து பெயரையும் எழுதுங்கள்.

# 15

# மாட்டுக் குடிலில் பிறந்த குழந்தை



அன்று பெத்லகேம் ஊருக்கு மிகச் சிறந்த நாளாகும். வானத்தில் நட்சத்திரங்கள் நிறைந்து இருந்தன. அதிசயமான ஒரு வால் நட்சத்திரமும் தோன்றி இருந்தது.

வானத்திலிருந்து இறங்கி வந்த வானதூதர்களின் பாடலின் ஒலியால் இடையர்கள் விழித்தனர்.

இந்த குளிரான நள்ளிரவு வேளையில் தூரத்திலே சின்னஞ் சிறிய குழந்தையின் குரல் கேட்கின்றது. அந்த சிறிய குரல் கேட்கின்ற திசைக்கு நானும் சென்றேன். தேடிச் செல்லும்போது அந்த அதிசயமான வால் நட்சத்திரமும் நின்று விட்டது.

அந்த இடம் மிகவும் அழகாயிருந்தது. அது ஒரு மாட்டுக் குடில். அங்கு அழகான ஒரு குழந்தையை அம்மாவும் அப்பாவும் தாலாட்டுவதை நான் கண்டேன். அந்த குழந்தையின் அருகில் செல்ல நானும் விரும்பினேன். நான் காலைத் தூக்கி முன்னால் வைக்கும்போது விழுந்து விட்டேன்.

இப்பொழுதுதான் நான் என்ன நடந்தது என்று அறிந்தேன். கனவிலாவது பாலன் இயேசுவின் அருகில் சென்றேன் என நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

இயேசுவைப் பார்ப்பதற்கு ஏழை இடையர்களே முதலில் வந்தனர். பின்னர் ஞானிகள் வந்ததாக நான் கேள்விப் பட்டுள்ளேன்.

ஏழைகள், துணை இல்லாதவர்களை இயேசு மிகவும் அன்பு செய்கின்றார் என்று அம்மா எனக்கு சொல்லித் தந்துள்ளார்.

அன்பான இயேசுவே, உங்களைப் போன்று எல்லோரையும் ஒரே மாதிரியாக அன்பு செய்ய எனக்கு உதவி செய்தருளும். எனது நண்பர்களை மட்டும் அல்லாது அனைவரோடும் மகிழ்ச்சியாக இருப்பதற்கு எனக்கு உதவி செய்தருளும். ஆமென்.



ஒப்படை

- உங்கள் நண்பருக்கு அனுப்புவதற்காக கழிவுப் பொருள்களைப் பயன்படுத்தி நத்தார் வாழ்த்து அட்டை ஒன்று தயாரியுங்கள்.
- மாறியுள்ள சொற்களை சரியான வசனமாக எழுதுங்கள்.
  - i. பிறந்தார் / இயேசு / மாட்டுக் குடிலில்
  - ii. தோன்றி/ வால்நட்சத்திரம் /வானத்தில் / இருந்தது
  - iii. உதயமாகிறது / டிசெம்பர் / நத்தார்/ இருபத்து ஐந்து

16

# சிறுவர் எமது சிறந்த நண்பர்




கலிலேய நாசரேத் ஊரிலே
காத்து வளர்த்த தந்தை தாயாம்
யோசேப்பு மரியா திருக்குடும்பத்தில்
கீழ்ப்படிந்து சிறுவன் இயேசு
கனிவுடன் வாழ்ந்தாரே!

அன்னை மரியாவிடம் அன்பு காட்டி
அன்பு மகனாக வீட்டு வேலைகளில்
சின்ன இயேசு செய்த செயல்களால்
சீராக இறை சிந்தையைப் போற்றினாரே!

தச்சுப்பட்டறையில் கதிரை மேசை தயாரித்து
தன்னைக் காத்த தந்தையின் உழைப்பையும்
தாகம் மிகுந்து பட்ட களைப்பையும் கண்டு
தண்ணீர் தந்து இயேசு மகிழ்ந்தாரே

பெற்றோருடன் இயேசு மகன்
பொறுமையுடன் துன்ப துயரங்களை சகித்து
பிறருக்காக இறைதந்தையை வேண்டிப்
போற்றி மகிமையில் வளர்ந்தாரே!

அன்பான இறைதந்தையே இயேசுவைப் போன்று நாமும் பெற்றோருக்கும் பெரியவர்களுக்கும் கீழ்ப்படிய உதவியருளும். ஆமென்.




### ஒப்படை

- இயேசு தச்சுப் பட்டறையில் யோசேப்புக்கு உதவி செய்த ஒரு சந்தர்ப்பத்தை வரைந்து நிறம் தீட்டுங்கள்.
- நீங்கள் வீட்டு வேலைகளில் தாய்க்கு அல்லது தந்தைக்கு உதவிய ஒரு சந்தர்ப்பத்தை எழுதுங்கள்.


### செயற்பாடு

பெற்றோர்க்குக் கீழ்ப்படியக்கூடிய சந்தர்ப்பம் உள்ள பூ இதழுக்கு மட்டும் மஞ்சள் நிறம் தீட்டுங்கள்.



17

# ஆதாமும் ஏவாளும்




நாங்கள் இறைவனின் முதல் மனிதப் படைப்பு ஆவோம். அதனால் பிள்ளைகளே நீங்கள் எங்களை ஆதிப் பெற்றோர் என அழைக்கின்றீர்கள்.

இறைதந்தை எம்மை அதிகம் அன்பு செய்தார். எந்நேரமும் எம்மோடு கதைத்தார். எமக்கு ''ஏதேன்'' என்னும் அழகிய தோட்டத்தைத் தந்தார்.

அந்தத் தோட்டத்திலே எல்லா வகையான சுவையான பழங்களும் இருந்தன. எல்லா வகையான மிருகங்களும் ஒற்றுமையாய் வாழ்ந்தன. இவை எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும்படி இறைதந்தை எமக்குக் கூறினார். நாங்கள் அவை எல்லாவற்றிற்கும் பெயரிட்டோம். நாம் ஏதேன் தோட்டத்தில் மிக்க மகிழ்ச்சியோடு வாழ்ந்தோம்.



**ஒப்படை**

1. கீழே காணப்படும் சொற்களைக் கொண்டு கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்.

(ஆதாமும் ஏவாளும், ஏதேன், பழங்கள், அன்பு, கீழ்ப்படிவோம்.)

i. இறைவன் படைத்த ஆதிப்பெற்றோர் ..................... ஆவர்.

ii. ஆதாம் .................... தோட்டத்தில் வைக்கப் பட்டார்.

iii. ஏதேன் தோட்டத்தில் இருந்த................ மிகவும் சுவையானவை.

iv. நாம் மிருகங்களை ...................... செய்வோம்.

v. நாம் இறைதந்தைக்கு ............................


# 18

# காயினும் ஆபேலும்

காயின்



ஆபேல்




ஆதாம் ஏவாளுக்கு காயின், ஆபேல் என இரண்டு பிள்ளைகள் இருந்தனர்.

| | |
|---|---|
| • காயின் ஒரு விவசாயி<br>• இறைதந்தைக்கு நிலத்தின் பலனிலிருந்து காணிக்கை கொண்டு வந்தார்.<br>• காயினின் காணிக்கையை இறைதந்தை கனிவுடன் கண்ணோக்கவில்லை. | • ஆபேல் ஒரு மேய்ப்பன்.<br>• கொழுத்த ஆட்டை இறை தந்தைக்குக் காணிக்கையாகக் கொடுத்தார்.<br>• ஆபேலின் காணிக்கையைக் கனிவுடன் கண்ணோக்கினார். |

அன்பான இறைதந்தையே, எப்பொழுதும் உங்கள் மீது உள்ள அன்பினால் நான் செய்கின்ற சிறு வேலையையும் நன்றாகச் செய்து உங்களை மகிழ்விக்க எனக்கு உதவி செய்தருளும். ஆமென்.

செயற்பாடு

- தராசில் உள்ள காணிக்கைகளில் இறைதந்தை விரும்பக் கூடியதாக ஒப்புக் கொடுத்த காணிக்கையைத் தெரிவு செய்து நிறம் தீட்டுங்கள்.



## 19


# நோவாவும் வெள்ளப் பெருக்கும்



அம்மா : மழை முடிவில்லாமல் பெய்து கொண்டிருக்கிறது. வெளியே செல்லவும் முடியவில்லை. நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கைப் போன்று உள்ளது.

மகன் : அது என்ன சம்பவம் அம்மா?

அம்மா : மகனே, இறைதந்தை மனிதர்களை மிகவும் அன்பு செய்தார். எனினும் மனிதர்கள் தீமையான செயல்களைச் செய்தனர். இதனால் இறைதந்தை கவலையடைந்தார். அதனால் அவர்களுக்கு ஒரு தண்டனை கிடைத்தது.



நோவா இறைதந்தைக்கு அன்பும் கீழ்ப்படிவும் காட்டிய ஒருவர் ஆவார். ஒரு நாளும் தீமையான வேலைகளைச் செய்யவில்லை. இறைதந்தையின் கருணை நோவாவுக்குக் கிடைத்தது. தண்டனை யிலிருந்து நோவாவைப் பாதுகாக்க இறைவன் விரும்பினார். ஆகவே இறைவன் நோவாவுடன் கதைத்தார். வெள்ளப் பெருக்கை அனுப்புவதாகக் கூறினார்.

இதனால் நோவா மக்களுக்கு அறிவுரை கூறினார். எனினும் அவர்கள் தாம் செய்த தீய செயல்களை கைவிடவில்லை. இறைவனின் குரலுக்கு நோவா கீழ்ப்படிந்தார். நோவா தனது புதல்வர்களுடன் சேர்ந்து பெரிய கப்பல் ஒன்றைக் கட்டினார். கப்பலைக் கட்டி முடிக்க இரண்டு வருடங்கள் எடுத்தன.



இறைதந்தை கூறியதைப் போன்றே நோவாவின் குடும்பத்தில் உள்ள எல்லோரும், எல்லா இனத்தையும் சேர்ந்த விலங்குகளிலும் சோடிகளாக கப்பலின் உள்ளே எடுக்கப்பட்டன. இறைதந்தை கப்பலின் கதவை மூடினார். மழை பெய்யத் தொடங்கியது.

மகன் : அம்மா எத்தனை நாட்கள் மழை பெய்தது?

அம்மா : நாற்பது நாட்கள் விடாமல் மழை பெய்தது. பெரிய வெள்ளத்தினால் முழு உலகும் அழிந்து போனது. கப்பலில் இருந்தவர்கள் மட்டும் தப்பினர். மழை நின்றது. நீரும் வற்றியது.

நோவாவும் கப்பலில் இருந்த எல்லோரும் இறைவனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்தனர். புதிய ஒரு வாழ்க்கை நடத்தினர். அதனால் இறைதந்தை இரக்கம் காட்டினார். அன்போடு ஒரு அடையாளத்தையும் தந்தார்.

மகன் : அம்மா அது என்ன?

அம்மா : அது வானத்தில் தோன்றுகின்ற அழகான வானவில் ஆகும்.



ஒப்படை

1. பெரிய கப்பலைச் செய்தவர் யார்?
2. கப்பலை செய்து முடிக்க எத்தனை வருடங்கள் சென்றன?
3. எத்தனை நாட்கள் மழை பெய்தது?
4. இறை அன்பின் அடையாளத்தை வரைந்து நிறந் தீட்டுங்கள்.

அறிவுரைப்பு - இப்பாடத்திற்குரிய செயற்பாடுகள் பக்க இலக்கம் 51 இல் உள்ளது.

20

# தூய டொமினிக் சாவியோ



- தூய டொமினிக் சாவியோ 1842 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி பிறந்தார்.
- இவர் இத்தாலியில் உள்ள முறி அல்டோ என்ற ஊரில் பிறந்தார்.
- தூய சாவியோ மிகப் பக்தியோடு திருப்பலியில் பங்கு பற்றிய சிறுவன் ஆவார்.
- இயேசுவோடு கதைப்பதற்கு அதிக விருப்பம் காட்டினார்.

- கடும் குளிரிலும் அதிகாலையில் எழுந்து ஆலயத்துக்குச் சென்றார்.
- அருட்தந்தைக்கு உதவி செய்தார்.
- இவருடைய திருவிழா மார்ச் மாதம் 10 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

தூய டொமினிக் சாவியோ முனிவரே உங்களைப் போன்று இறைதந்தையை அன்பு செய்ய எனக்கு உதவி செய்தருளும். இயலுமானபோது உங்களைப்போன்று ஆலயத்துக்குச் செல்வதற்கு விருப்பத்தை ஏற்படுத்தியருளும். ஆமென்.



ஒப்படை

கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் ''தூய டொமினிக் சாவியோவின் திருவிழா மார்ச் பத்தாம் திகதி ஆகும்''என்ற வசனத்திற்கு உரிய சொற்களைச் சுற்றி மட்டும் வட்டம் இடுங்கள்.

தூய இத்தாலியில் டொமினிக் பிறந்தார். சாவியோவின் எமது நல்ல திருவிழா பிள்ளைகள் மார்ச் என்பது பத்தாம் இருக்க திகதி இவ்வாறு ஆகும்.

# 21

# தூய நிக்லஸ்



- தூய நிக்லஸ் துருக்கி என்னும் நாட்டில் பிறந்தார்.
- இவர் செல்வம் மிகுந்த குடும்பத்தின் ஒரே பிள்ளை ஆவார்.
- சிறுவயது முதல் இறைதந்தைக்கு அதிகம் அன்பு காட்டிய தூயவர் ஆவார்.
- தூய நிக்லஸ் தனது பணம், உடைகள் ஆகிய சொத்துக்களை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்தார்.



இலவச விநியோகத்திற்காக

- அவற்றை இரகசியமாக அவர்களுடைய கதவருகில் வைத்தார். இதனாலயே தூய நிக்கலாருக்கு நத்தார் தாத்தா என்ற பெயர் வந்தது.
- நத்தார் காலத்தில் நத்தார் தாத்தா இரகசியமாக எமக்குப் பரிசுகள் வைத்துச் செல்வதும் தூய நிக்கலாரைப் போன்ற செயல் ஆகும்.
- நீங்களும் ஓர் ஏழை பிள்ளைக்கு இரகசியமாக உதவி செய்து நத்தார் தாத்தா ஆக விருப்பமா?

அன்பின் இறைதந்தையே தூய நிக்கிலாரைப் போன்று ஏழை எளியவர்களுடன் பகிர்ந்து வாழ்வதற்கு உதவியருளும். ஆமென்.



ஒப்படை

- தூய நிக்லஸ் போன்று நீங்களும் இந்த நத்தார் நாளில் ஏழைகளுக்கு கொடுக்க விரும்பிய பரிசுகள் இரண்டினை எழுதுங்கள். அவற்றை வரைந்து நிறம் தீட்டுங்கள்

அறிவுரைப்பு - இப்பாடத்திற்குரிய செயற்பாடுகள் பக்க இலக்கம் 52 இல் உள்ளது.

## செயற்பாடு - பாடம் 1

★ உன்னத இறைதந்தை தந்தவற்றைப் பாதுகாப்பதற்காக வைக்க வேண்டிய சரியான இடத்தைத் தேடித் தொடர்பு படுத்துங்கள்.


















# செயற்பாடு - பாடம் 5

எனது பாவங்களினால் சிலுவை பாரமாயிருந்தது. அதற்குப் பதிலாகச் செய்யக்கூடிய நல்ல செயல்களை புள்ளிகளின் மேல் எழுதுவோம்.




1 கீழ்ப்படிவு

2 நல்ல வார்த்தைகள் பேசுதல்

3 அன்பு செய்தல்

## செயற்பாடு - பாடம் 10

★ இங்குள்ள செபமாலைக்கு நிறந்தீட்டுங்கள்.

- பரலோக மந்திரம் - சிவப்பு
- அருள்நிறை மரியே - நீலம்




## செயற்பாடு - பாடம் 12

★ நீங்கள் ஆலயத்திற்குச் செல்லும் சரியான பாதையைத் தேடி அதற்கு விரும்பிய நிறத்தைத் தீட்டுங்கள்.



## செயற்பாடு - பாடம் 19


★ இலக்கங்களைத் தொடர்புபடுத்துங்கள். பெறப்படும் உருவத்தின் பெயரை எழுதுங்கள். இந்த உருவத்திற்குள் நோவா எடுத்துச் சென்ற மூன்று விலங்குகளை வரையுங்கள்.



## செயற்பாடு - பாடம் 21

★ இங்குள்ள நத்தார் தாத்தாவின் ஆடையை இங்கு எழுதியுள்ள நிறங்களினால் திசுக் கடதாசித் துண்டுகளினால் சிறு உருண்டைகள் செய்து, ஒட்டி அலங்காரம் செய்யுங்கள்

சிவப்பு - ①
கறுப்பு - ②
வெள்ளை - ③




## செயற்பாடு - பாடம் 2

**இறைதந்தையின் அன்பினால் உங்களுக்குக் கிடைத்தவற்றின் படங்களை வெட்டி உரிய வட்டத்தில் ஒட்டுங்கள்.**


ஆகாயம்


நிலம்

நீர்















இலவச விநியோகத்திற்காக